திருச்சி முசிறியில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே என் அருண் நேரு கழக வேட்பாளராக போட்டியிடும் கருணை ராஜாவுக்காக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார் அவருடன் கழக நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உடன் சென்றனர்.

கரூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் ஆசி எம்.தியாகராஜன் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக் குமாருடன் சென்று, கரூர் வடக்கு பகுதி தீரன் நகர், ஜீவா நகர், சோழன் நகர் பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். நூற்றுக்கணக்கில் பொதுமக்கள் திரண்டு வந்து வரவேற்பு அளித்தனர்.

சேலம் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் ஆ க தருண் மஜ்ரா கொல்லப்பட்டி பகுதியில் தீவிர வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள். மாணிகம், சதீஷ் குமார் ஆகியோர் இருந்தனர்.

தி.மு.க.
இளைஞர் அணி

கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். மூன்று கட்ட பரப்புரை முடிந்த நிலையில், நான்காம் கட்டமாக திருச்சியில் தொடங்கி பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அதன் விவரம் வருமாறு:

13.4.2026 திங்கள்கிழமை

நேரம்	தொகுதி	இடம்
காலை 9.30 மணி	விழுப்புரம்	நான்கு முனை சாலை சிக்னல், விழுப்புரம்.
காலை 10.45 மணி	திருக்கோவிலூர்	பேருந்து நிலையம் அருகில், திருக்கோவிலூர்.
மாலை 4.00 மணி	செஞ்சி	நான்கு முனைச் சந்திப்பு, விழுப்புரம் சாலை, செஞ்சி.
மாலை 5.30 மணி	திண்டிவனம்	செஞ்சி சாலை, திண்டிவனம்.
இரவு 7.00 மணி	செங்கல்பட்டு	இராட்டினம் கிணறு, செங்கல்பட்டு.
இரவு 9.00 மணி	ஆலந்தூர்	அண்ணா சிலை அருகில், ஸ்டேட் பேங்க் குடியிருப்பு, நங்கநல்லூர்.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 11.4.2026

கலைஞர் 100
1924 - 2023

பெரம்பலூர் தொகுதி வெற்றி வேட்பாளர் எஸ்.டி.ஜெயலெட்சுமி, ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், புது அம்மாபாளையம் கிராமத்தில் வயலில் கடலை ஆயும் பெண்களிடம் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். டாக்டர் செ.வல்லபன், மகாதேவி ஜெயபால், ஆர்.அருண், ராஜேந்திரன், ஜெயசீலன் தங்கராசு, ஈஸ்வரன், எம்.மணிவாசகம் உள்ளிட்டோர் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எஸ்.எஸ். தென்னரசு
ஏப்ரல் 13 (1991)



தென்மாவட்டங்களில் கழகம் வலிவுடன் வளர பெரிதும் காரணமானவரும், மூத்த தளபதிகளில் ஒருவராகவும் இருந்து கழகத்தை வழிநடத்திச் சென்ற ஆற்றலாளர்.

அண்ணாவால் அரவணைக்கப்பட்டு அரசியலில் நுழைந்து கலைஞரின் இதயத்தில் தனி இடம் பெற்றவர்.

சிறுகதை மன்னன், சின்னமருது என்றெல்லாம் அழைக்கப்பட்டவர்.

1949ல் கிளைச் செயலாளராக பொறுப்பேற்று, வட்டச் செயலாளராக வளர்ந்து, மாவட்டச் செயலாளராக உயர்ந்து, படிப்படியாக கழக அமைப்புகளின் நுணுக்கங்களை அனுபவ பூர்வமாக அறிந்த காரணத்தால், அமைப்புச் செயலாளர் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டவர்.

ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கு, மாவட்டச் செயலாளராக 15 ஆண்டுகள் பணியாற்றிய பெருமை இவருக்கு உண்டு.

தி.மு.கழகத்தின் சிறைப் பறவையாக வாழ்ந்து காட்டியவர். 26 முறை கழகத்திற்காக சிறை சென்றவர். மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறைவாசம் இருந்தவர். அதேபோன்று 1965ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக 1989ஆம் ஆண்டு திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1990ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கே.ஆர்.என். ராஜஸேக்குமார் பங்கேற்பு!

இராசிபுரத்தில் மா.மதிவேந்தனை ஆதரித்து! திருச்சி சிவா எம்.பி. தேர்தல் பிரச்சாரம்!

நாமக்கல், ஏப். 13 -

நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் தொகுதிக்குட்பட்ட வெண்ணந்தூர் ஒன்றியம் அத்தனூர் அண்ணா சிலை மற்றும் மோகனூர் பேரூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில், திமுக வேட்பாளர் மா.மதிவேந்தனை ஆதரித்து கழகத் துணை பொதுச்செயலாளரும் மாநிலங்களவை குழு தலைவருமான திருச்சி சிவா எம்.பி கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் நலத்துறை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரும் ராசிபுரம் (தனி) தொகுதி வேட்பாளருமான மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற வேட்பாளர் கே.பி. இராணி, ஒன்றிய திமுக செயலாளர் ஆர். எம்.துரைசாமி, பேரூர் செயலாளர்கள் அத்தனூர் கே.கண்ணன், வெண்ணந்தூர் ஆர்.எஸ். எஸ்.ராஜேஷ் மோகனூர் ஒன்றிய செயலாளர் நவலடி பேரூர் செயலாளர் செல்லவேல் (எ) சி.செல்லப்பன் உள்ளிட்ட ஆகியோர் முன்னிலை வகித்தனர்=

கழகத் துணை பொதுச் செயலாளரும் மாநிலங்களவை குழு தலைவருமான திருச்சி சிவா எம்.பி கலந்து கொண்டு பேசுகையில், “தேர்தல் என்பது திருவிழா அல்ல. வாக்குச்சாவடிகளில் செலவழிக்கும் சில நிமிடங்களே உங்கள் வருங்கால வாழ்க்கையை தீர்மானிக்கும். அனைத்து ஆட்சிகளையும் அனுபவ ரீதியாக மதிப்பீடு செய்து, நன்றாக யோசித்து உங்கள் வாக்கை பயன்படுத்த வேண்டும். ஏன் அந்த வாக்கை எங்களுக்கு தர வேண்டும் என்பதை விளக்குவதற்காகவே நாங்கள் வந்துள்ளோம்” என்றார்.

“நாளை இதே இடத்தில் மற்ற கட்சிகளும் வரலாம். அவர்கள் பேசுவதையும் கேட்டுவிட்டு முடிவு எடுக்க வேண்டும். எல்லோரையும் சமமாக நடத்தும் இடம் வாக்குச்சாவடி தான். ஏப்ரல் 23ஆம் தேதி பணக்காரர், ஏழை, படித்தவர், படிக்காதவர் என அனைவரும் ஒரே வரிசையில் நிற்பார்கள். இந்த நாட்டின் ஓட்டு சீட்டு அனைவரையும் சமமாக நடத்துகிறது. அதை சரியாக பயன்படுத்தினால் அடுத்த ஐந்து ஆண்டுகள் நிம்மதியாக வாழலாம்” எனக் கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கூ. பால்ச்சாமி
ஏப்ரல் 13 (2021)



கழகம் துவங்கிய நாளிலிலேயே உறுப்பினராகி பணியாற்ற தொடங்கியவர்.

காரியாபட்டி ஒன்றிய அவைத்தலைவர், ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

விருதுநகர் மாவட்ட கவுன்சிலராகவும், கூட்டுறவு நாணய சங்கத் தலைவராகவும் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டதோடு, 1976ல் மிசா சட்டத்தில் ஓராண்டு சிறைவாசமும், 1984ல் சட்ட எரிப்பு போராட்டத்தில் நான்கு மாத சிறைவாசமும் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.